# "இராணுவ நடவடிக்கை வெற்றி தராது என அரசு இப்போதாவது உணரவேண்டும்" - திலகர்

விலை ரூபா 5-00


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 26 இதழ் 181
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10 — 08 — 1992


(பரிஸ்) "இராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்னையை தீர்த்துவிடலாம் என அரசு நினைப்பது சரியல்ல என்பதை இப்போதாவது அரசு உணர்ந்துகொள்ளவேண்டும்" (4ம் பக்கம் பார்க்க)

## "அரசியல் தீர்வு அவசியம்" ஜனாதிபதி

[கொழும்பு] வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியமாகும். கேகாலை நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஐ. தே. கட்சியின் வருடாந்த 4-ம் பக்கம் பார்க்க]

## "நாம் எதற்காக சண்டையிடுகிறோம்?"- பிரதமர்

(கொழும்பு) "இந்த உலகில் சிறிது காலமே தங்கியிருக்கும் நாம் ஏன் ஒருவரோடு ஒருவர் சண்டை போடுகிறோம் ஏன் (4-ம் பக்கம் பார்க்க)

# கொப்பேகடுவ, விமல இல்லாது யுத்தம்பற்றி நினைக்கமுடியாது!

## இராணுவ அதிகாரி தகவல்

(மணிலா)

இலங்கையின் வடபகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியான வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, யாழ் மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜயவிமலரத்ன ஆகிய இருவரும் இல்லாது வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பற்றி கற்பனை செய்து பார்க்கவே முடியாதிருக்கிறது.

இவ்வாறு இராணுவ உயரதிகாரி ஒருவர் 'வெரித்தாஸ்' வானொலிக்கு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு கிழக்கு வரை நேரடியாக யுத்தத்தை இவர்கள் முன்னெடுத்துச் சென்ற (4-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய தாக்குதல் பற்றியே கொப்பேகடுவ தலைமையில் முக்கிய கூட்டம் நடந்தது

[(கொழும்பு) யாழ். குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதலை இராணுவம் இன்று தொடக்க இருந்ததாகவும், இதற்காக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையில் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ மரியாதைகளுடன் இன்று இறுதிச்சடங்குகள்!

(கொழும்பு) வடபகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தில் உயிரிழந்த இராணுவத் தளபதிகளின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த அவர்களின் இல்லங்களுக்கு பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்றுக் காலையில் சென்று தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பிரிகேடியர் விஜய விமலரத்னவின் பூதவுடல் கடவத்தை [4-ம் பக்கம் பார்க்க]

நட்டஈடு வழங்கப்பட்டு

## சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் திருப்பி அனுப்பப்படுவர்

[கொழும்பு] நட்டஈடு வழங்கப்பட்டு பல வந்தமாகவேனும் சுவிஸிலுள்ள முப்பதினாயிரம் இலங்கை அகதிகள் படிப்படியாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கொழும்பிலுள்ள சுவிஸ்தூதுவர் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: கடந்த வருடம் மட்டும் 2,300 இலங்கையர்கள் சுவிஸ் சென்றுள்ளனர் இவர்களில் கடைசியாகச் சென்றவர்களே முதலில் அனுப்பப்படுவார்கள்.

[4ம் பக்கம் பார்க்க)

> ஆளுக்கொரு மரம் நடு
> ஆயுள் நீள உறுதி எடு

இராணுவ அதிகாரிகளின் இழப்பு

## புலிகளுக்கு பெரும்வெற்றி

(கொழும்பு) இராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பு, இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளன, இது புலிகளுக்கு பெரும் வெற்றியென அரசியல் விமர் [4ம் பக்கம் பார்க்க]

## இரு பிரிகேடியர்கள் வடபகுதிக்கு நியமனம்

(கொழும்பு) மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன ஆகியோரின் இடங்களுக்குப் புதிதாக இரண்டு பிரிகேடியர்கள் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ள (4-ம் பக்கம் பார்க்க)

## விமலரத்ன இந்தியாவில் இராணுவப் பயிற்சிபெற இருந்தார்

[கொழும்பு] நேற்றுமுன்தினம் வேலணை அராலிப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் பலியான யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜயவிமலரத்ன இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தியா சென்று உயர் இராணுவ பயிற்சிபெற இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-சு]

## இராணுவ நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும்

[கொழும்பு] யாழ். குடாவை மீண்டும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நோக்குடன் விரைவில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது கூட்டுப்படை தலைமையக அதிகாரிகள், முப (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப்பயணிகள் மீது தாண்டிக்குளத்தில் தாக்கு

(வவுனியா) வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் தமிழ்ப் பயணிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப் (4-ம் பக்கம் பார்க்க)

யாழ். குடா

## தாக்குதலை கண்டித்து பாரிஸில் ஒன்றுகூடல்

[பாரிஸ்] யாழ். குடா மீது ஸ்ரீலங்கா படைகள் நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டித்து பாரிஸ் நகரில் அண்மையில் மாபெரும் கண்டன ஒன்றுகூடல் நடைபெற்றது

பாரிஸ் இன்வலிட் என்ற இடத்தில் நடைபெற்ற இக் [4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ் ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களைதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல் லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILA Capsules. கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கல்ஸ் ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6552)

### நொத்தாரிஸ்களுக்கு

முதல்தர லெஜரிலான ஈடு வகை Blank உறுதிகள் - மாண வர்க்கான அறிவுக்களஞ்சியம் மொத்தமாகவும் சில்லறை யாகவும் விற்பனையாகின்றன. கழிவுண்டு. துர்க்கா ஸ்ரேஷ னேர்ஸ் சுன்னாகம். (எ-2341)

### புத்தக கண்காட்சியில்

ஐந்து "மீரா பிரசுரங்களை" வாங்குபவர்களுக்கு 50/-ரூபா பெறுமதியான "புதிய மீரா நாவல்" அன்பளிப்பாக வழங் கப்படுகிறது. ஸ்ரீகாந்த்புத்தக சாலை, நல்லூர் கோயில் முன் புறம். (சி-6638)

### தரமான கண்ணாடித் துண்டுகள்

உடைந்த கண்ணாடித் துண்டுகளை பிறேம் போட உகந்தவை, வாங்கப்படும் சிறந்த முறையில் படங்கள் பிறேம் செய்துகொள்ள எம்மை நாடுங்கள். திரு ஞானம்ஸ் படமாளிகை, 266, ஸ்ரான்லி வீதி, (விக்டோ ரியூஷன் அருகாமை) யாழ்ப் பாணம். (சி- 6645)

### ஜோதிடன்

"ANPUGEE" என்ற பெய ரில் இயங்கிய (கட்டுப்பாடு) சோதிட, (ஏனைய) நிலையம் JAFFNA FORT, J/81 இல், V. P கந்தசாமியின் இளையமகன் செல்வன் "SHYANBUGEE, ஆல் இயங்குகின்றது (சி-6653)

### விற்பனைக்கு

தாவடி - மானிப்பாய் வீதி யில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்கு உண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம் மணிவீதி, நல்லூர் முத்திரைச் சந்தை. 'சாமுவேல் தொழிற் சாலையிலிருந்து இரண்டாவது வீடு) (சி-6649)

## பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டாவது எம் பி.பி எஸ். பரீட்சையில் முதலாம் தரத் தில் செல்வி பி. கந்தையா என்ற ஒரே ஒரு மாணவியும், இரண்டாவது வகுப்பில் இரு பது மாணவர்களும், சாதா ரண சித்தியில் பத்தொன்பது மாணவர்களும் சித்தி பெற் றிருக்கின்றார்கள் என யாழ். பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் இருந்து தெரிய வருகின்றது. (சு-ரி)

## ஆயுர்வேத வைத்திய நிலையம்

(திருநெல்வேலி)

யாழ். மாநகராட்சி மன்ற வளவினுள் ஆயுர்வேத வைத் திய நிலையமொன்று ஆரம்பிக் கப்படவுள்ளது.

நல்லூர் கல்யாண மண்ட பத்தில சிறிய அளவில் இயங்கி வந்த மைதானத்தை விரிவு படுத்தி பல வசதிகளுட னும் புதிதாக மாநகராட்சி மன்ற வளவில் ஆரம்பிக்க ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. (157)

லஞ்ச ஊழல்

## உயரதிகாரி கைது

(புதுடில்லி)

இந்திய முன்னாள் உயரதி காரி ஒருவர் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இந்தியபொருளாதாரத்திட் டக் குழுவின் உறுப்பினர்க ளில் முக்கியமான அரச பணி யாற்றிய வி. கிருஷ்ண மூர்த்தி என்பவரே கைதாகி யவராவர்.

பம்பாய் பங்குச் சந்தை தர கர்டம் பணம் வாங்கிய குற் றத்திற்காக இவர் தற்சமயம் கைதாகியுள்ளார் (கே)

காய்ச்சல், சளி, ஆஸ்மா

# நோய்களினால் ஒரு வாரத்தில் 25 பேர் உயிரிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாப் பகுதியில் கடந்த மாதத்திலிருந்து தீவி ரமாகப் பரவரும் நெருப்புக் காய்ச்சல், சளி, தடிமன் ஆஸ்மா போன்ற இன்னோ ரன்ன நோய்களினால் பீடிக கப்பட்ட நிலையில் கடந்த வாரத்தில் மட்டும் யாழ். வைத்தியசாலையில் ஐந்து குழ ந்தைகள் உட்பட 25 பேர் வரையில் மரணமாகியுள்ள னர் என்று வைத்திய சுகா தாரப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

பெரியோர்களில் புற்று நோய், சலரோகம் இருதய நோய், தொய்வு போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பலர் மரணமாகியுள் ளனர்.

வயிற்றோட்டத்திற்கு விடுதி யில் அனுமதிக்கப்பட்டிருந்த 3 வயதுச் சிறுமியான ஊரெழுவைச் சேர்ந்த செல்வி சுவாசினி தம்பிராசா என்ற சிறுமி நேற்று முன்தினம் மர ணமானார்.

சளி முட்டு நோயினால் அரி யாலை அகதி முகாமைச் சேர்ந்த வே. சசீபன் என்ற 8 மாதக் குழந்தையும் மரண மாகியுள்ளது. சமரபாகு வல் வெட்டித்துறையைச் சேர்ந்த சோபிதா சுந்தரசேகரம் என்ற சிறுமியும் உயிரிழந்தி ருக்கிறார்.

சளி, முட்டு, காய்சலுக்குள் ளாகி கடந்த மாதததில் 4, 5 மாதக் குழந்தைகள் இரண் டும் ஒன்றரை மாதக்குழந்தை மூன்றும் உட்பட 15 பேர் வரையில் மரணமாகியிருக் கின்றனர். (56-ரி)

## இன்று

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட தனியார் கல்வி நிறு வன ஒன்றியத்தினரின் விசேட பொதுக்கூட்டம் இன்று 10 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தி யாலயத்தில் நடைபெறவுள் ளது.

இக்கூட்டத்தில் மிக முக்கிய மானவிடயங்கள் பலவற்றைப் பற்றி கலந்துரையாடவேண்டி யிருப்பதால் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரிவுக்குட் பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களை யும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகின்றனர்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜம் அடுத்து வரும் கப் பல்கள் மூலம் விவசாயிக ளுக்கு தேவைப்படும் பொருட் களை கொழும்பிலிருந்து இங்கு கொண்டு வருவது பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் இன்று 10-ம திகதி திங்கட் கிழமையன்று யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெருவிலுள்ள சமாஜத்தின் பணிமனையில் நடைபெறவுள்ளது. (72-அ)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

பாட்டு: ராதிகா சுப்பிர மணியம், வயலின்: சாந்த நாயகிசுப்பிரமணியம் மிருதங் கம்: கண்ணதாஸன். (சி)


# பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலககெயர் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற் படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித் தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்
8 ஆம் வகுப்பும் (ஆண்டு 9) அதற்கு மேற்பட்டோரும்

**கொடுப்பனவு:**

ஸ்தாபனப் பயிற்சியின்போது ($2\frac{1}{2}$ மாதம்) மாதம் 600/-வும், பயிலுநர் பயிற்சியின்போது (10 மாதம்) வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 15 - 8 - 92 இற்குப் பிந்தாமல்

பதிவாளர்
பற்றீஷன்
தொழிற்பயிற்சி நிறுவனம்
இல: 59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (ஏ-2352)



## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

வழக்கம்பரை — சுளிபுரம்

# விசேட பொதுக்கூட்டம்

## 16 - 08 - 92

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 16-08-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு பண்ணாகம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. ச. சிவஞானம் (B. Sc. Dep. in Ed.) அவர்களின் தலைமையில் நடை பெறும். பொதுச்சபை பிரதிநிதிகள் தவறாது குறிப் பிட்ட நேரத்திற்கு சமுகம் கொடுத்து ஒத்துழைக்கு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஒப்பம்
க. நடராசா,
செயலாளர்.

7-8-92.

குறிப்பு:

பொதுச்சபை பிரதிநிதிகள் இடம்பெயர்ந்து இருப்பதால் அவர்களின் முகவரி அவர்களால் இது வரை அறிவிக்கத் தவறியுள்ளவர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலை வழக்கம்பரையில் உள்ள சங்க தலைமைக் காரி யாலயத்தில் செயலாளரிடம் பெற்றுக்கொள்ள வும். ஏற்கனவே எம்மிடம் தொடர்புகொண்டு விலா சம் தந்தவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. (ஏ-2351)



## இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

# மகாலக்ஷ்மி பூசை, சுமங்கலி பூசை தீப பூசை விஞ்ஞாபனம்

காலம்: 13-8-92 வியாழக்கிழமை இரவு 9 மணி

விசேட நிகழ்ச்சி: **பட்டி மன்றம்**



நடுவர்:

செஞ்சொற்பாரதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்)

பொருள்:

"தாங்கொணாச் சோதனையில் தளம்பாத பெருமைக்குப் பெரிதும் உரியவள்

| கோசலையே! | தாரையையே! |
|---|---|
| திரு. க. சிவராமலிங்கம் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. திருமுருகன் | செல்வன் ஸ்ரீ பிரசாந்தன் |
| திரு. க. குமாரதாசன் | திரு. தி. திருநந்தகுமார் |

மண்டோதரியே?"

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை
திரு. க. ரகுபரன் திரு. த. சிவகுமாரன்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
தேவஸ்தானம் இணுவில்

(சி 6655)

யாழ்ப்பாணம்



# "பத்து வருடகால போராட்டத்தின் விளைவாக நாங்கள் தமிழ் ஈழத்தை நெருங்கி விட்டோம்"

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேட்டி

"சுதந்திர தமிழீழத்தை இந்தியாவோ, இலங்கையோ ஏற்றுக்கொள்ளப்போவதில்லை நாங்கள் பத்துவருட கால போராட்டத்தின் விளைவாக தமிழீழத்தை நெருங்கிவிட்டோம்" இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய பத்திரிகையாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டி யொன்றிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளதாவது: "தமிழீழம் தான் எங்கள் தாயகம்" இதனை விடாமல் சொல்லி வருகிறோம். இருந்தும் உங்கள் யோசனையை சொல்லுங்கள் என்கிறார்கள். பதிலுக்கு நாங்கள் லெட்டர்ஹெட் தானே அனுப்பினாலே போதும் அதில் 'தமிழீழம் எங்கள் தாயகம்' என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார். எதைப்பற்றிப் பேசுவதென்று இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டைச் சொல்லவேண்டாமா? தமிழ் மக்களுக்கு அதிகபட்சம் அது என்ன தரும் என்று தெரியவேண்டாமா? அதைத் தெரிந்த பிறகுதான் அடுத்த கட்டம்.

தமிழீழத்தைத் தவிர வேறு எதையும் ஏற்கும் நிலையில் ஈழத்தமிழ் மக்கள் இல்லை. அவர்கள் இரண்டு ஆண்டுகளாக தங்கள் அலுவல்களை தாங்களே பார்த்துக் கொள்கின்றன.

இலங்கை-இந்திய அரசுகள் ஒப்புக்கொண்டாலும் சரி, இல்லாவிடினும் சரி தமிழ் மக்களுக்கு இதன்மூலம் தனி நாடு உருவாகிவிட்டது. இலங்கை அரசின் அதிகாரச் சின்னம் அங்கு எடுபடாது. தமிழர் பகுதிகளில் பல இடங்களில் இராணுவ முகாம்கள் உள்ளன. பலாலி முதலான இடங்களில் இராணுவ முகாம்கள் உள்ளன. பிறபகுதிகளும் கூட்டுப்படை வசம் உள்ளன இருந்தும் என்ன. முகாம்களைவிட்டு படையினர் வெளியே தலைகாட்ட முடியவில்லையே. இரண்டாண்டுகளாக உங்கள் அலுவல்களை சமாளித்துக் கொள்ளுங்கள் என்று விட்டுவிட்டார்கள். இனி எப்படி நாங்கள் விட்டுக் கொடுப்போம். இருந்தும் கூட சொல்கிறோம் இலங்கை அரசுடன் பேசத்தயார்.

பெரும்பான்மை சிங்கள மக்களின் பிடியிலுள்ள ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது. தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து ஒப்புக்கொள்ளப்பட்டு அவர்களது விருப்பங்கள் நிறைவேறும் வகையில் ஒரு தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்குமானால் அதனை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அமைச்சர் தொண்டமான் தனிப்பட்ட முறையில் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார் அதில் சில அடிப்படை உண்மைகளை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஈழத் தமிழர் பிரச்னையை புலிகளுடன் தான் பேசித்தீர்க்க வேண்டுமென்று கூறிவரும் அவர் யாழ்ப்பாணம் வந்திருக்கவேண்டும். அவரது தீர்வுத் திட்டம் கூட ஓரளவு பேச்சுவார்த்தைக்கு ஒரு அடிப்படையாக அமைந்திருக்கக் கூடும். பேச்சுவார்த்தை மூலம்தான் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப்படவேண்டுமென்று கூறும் தொண்டமான் ஈழத்தமிழருக்கு ஒரு தனித்தாயகம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவரது முயற்சிகளை சிங்கள அரசியல்வாதிகள் கெடுத்துவிட்டனர். அவர்கள் எப்போதும் இப்படித்தான். அதனால்தான் அவர்களை நாங்கள் ஒருபோதும் நம்புவதில்லை.

இலங்கை அரசு எப்படியும் எங்களை நசுக்கப்பார்க்கிறது நாங்கள் ஒருபோதும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. இங்கு மக்களுக்கு எல்லாமே பிரச்னை தான். அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இலங்கை அரசினால் ஏற்படும் அத்தனை சிரமங்களையும் சமாளிக்க எமது மக்கள் பழகிவிட்டனர். இனி அவர்களை திசை திருப்புவது கஷ்டம் என்றும் கூறினார். (ரி)

---

### சிங்களவர் அதிருப்தியடையாதிருக்க

# இராணுவத்தின் வழியிலே ஜனாதிபதி பிரேமா செல்கிறார்

## இந்தியா ருடே விமர்சனம்

[சென்னை]

தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதையே பிரேமதாசா விரும்பினாலும் இராணுவம் யாழ்ப்பாணத்தில் முன்னேறிச் செல்வதையே விரும்பும். சிங்களவர்களின் அதிருப்திக்கு ஆளாகாதிருக்க அவர் இராணுவம் இழுக்கிற திசையால் செல்லவேண்டி இருக்கலாம்.

இவ்வாறு 'இந்தியா ருடே' ஆகஸ்ட் இதழில் இலங்கை நிலைமைகுறித்து எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார். அக்கட்டுரையில்மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவும் மற்ற தமிழ் அமைப்புகளும் நிர்ப்பந்தப்படுத்தியும் தீவிரவாத அமைப்பைத் தடை செய்ய அவர் மறுப்பது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த பிரேமதாசா தயாராக இருப்பதைத் தெளிவாக காட்டுகின்றது.

பிரேமதாசாவை தர்ம சங்கடத்துக்குள்ளாக்கி பிரபாகரனை விசாரணைக்காக இந்தியா அனுப்பும்படி இந்தியா வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஏனென்றால் இலங்கை இராணுவம் புலிகளின் தலைவரை குறைந்த பட்சம் உயிருடன் பிடிக்கும் நிலையில் இல்லை என்று இந்தியாவுக்குத் தெரியும்.

புலிகள் பேச்சுவார்த்தை நடாத்த வந்தால் பிரேமதாசாவிற்கு வெற்றி, அவர் அவர்களுக்கு அதிகாரம் தந்துவிட்டு தனிஈழம் உருவாவதைத் தவிர்த்துவிடுவதாக சிங்களவரிடம் மார்புதட்டிக் கொள்ளலாம். அடுத்த தேர்தலில் அவர் ஆட்சிக்கு வருவது நிச்சயம் என்றாகிவிடும் என்று கூறியுள்ளார். (எஸ்)

---

### ஐந்தாவது உலக தமிழ்

# பண்பாட்டு மாநாடு

[சிட்னி]

ஐந்தாவது உலகத் தமிழ் பணபாட்டு மாநாடு அவுஸ்திரேலிய தலைநகரான சிட்னியில் நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் 2ம் திகதி முதல் 5ம் திகதி வரை இம்மாநாடு நடைபெறும்.

சிட்னி ஒருங்கிணைப்பு குழு, மலேசிய உலகத்தமிழ் பண்பாட்டுச் சழகம் ஆகியவை ஒன்றுபட்டு இந்தமாநாட்டை நடத்துகின்றன. (ரி)

---

### கலகலப்பாக காணப்படும்

# யாழ். பஸ்நிலையம்

[யாழ்ப்பாணம்]

இரண்டு வருட இடைவெளிக்குப்பின்னர் தற்போது யாழ். பஸ் நிலையம்இரவு நேரம்வரையில் கலகலப்காகக் காணப்படுகிறது.

முத்திரைச் சந்தையில் இயங்கி வந்த கொழும்புப் பயணிகளுக்கான பஸ் நிலையம் யாழ். நகர் பஸ் நிலையத்தில் இயங்கத் தொடங்கியதையடுத்தே பஸ் நிலையம் கலகலப்பாக காணப்படுகிறது. (56-ரி)

---

### ★ அகில இலங்கை ரீதியில்

# யாழ். பல்கலைக்கழக அணி 20 பதக்கங்கள் பெற்றது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழகம் 16 தங்கப்பதக்கங்கள் உட்பட 20 பதக்கங்களை பெற்றுள்ளது

இவ்விழாவின் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் கலாநிதி அருச்சுன அலுவிகார கலந்து கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக கொடியை கலாநிதி எஸ். சிறீசற்குணராசா ஏற்றி வைக்க யாழ். பல்கலைக்கழக விளையாட்டு குழுத்தலைவர் க. கணேசநாதன் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசாவும், உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு கலாநிதி எஸ். சிறீசற்குணராசாவும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

றுகுணு. மொறட்டுவ, கொழும்பு பல்கலைக்கழகங்களை வென்று யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணி சாம்பியனாகியது. இவ் அணிக்கு எம். முரளிதரன் தலைமை தாங்கினார். அணியின் 16 வீரர்களுக்கும் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மெய்வல்லுனர் போட்டியில் சோதிலிங்கம் 100, 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாமிடத்தை பெற்று சாதனை நிலைநாட்டி இரு தங்கப்பதக்கம் பெற்றார் 110 மீற்றர் தடை தாண்டி பாய்தலில் ஆம்ஸ்ரோங் 2வது இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் ஈட்டி எறிதலில் வி. எஸ். பி. துஷியந்தன் 3ம் இடத்தை பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றார். (சி)

---

### கொழும்பு செல்லும்!

# இளைஞர்களுக்கு ஆலோசனை

(கொழும்பு)

கொழும்பு நகருக்குப் புதிதாக வரும் இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்தால் பிரச்னை ஏற்படாது என்று அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்தார்.

இவ்வாறு பதிவு செய்வதின் ஊடாக பொலிசாரின் கைது நடவடிக்கையில் இருந்து தம்மை இளைஞர்கள் பாதுகாக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [ரி]

---

## கழலடி தொழுவார்க்கு ஒரு குறையும் இல்லை

விண்ணவர்கள் போற்றுகின்ற வேதநாயகனே!  
வேழமுகன் சோதரனே! வேலவனே! மால்வண்ணக்  
கண்ணனவன் மருகோனே! கார்த்திகேயா!  
கங்கைமுடி தரித்த சிவன்குமரா! இந்த  
மண்புகழும் நல்லூரில் மாதிருவர் சூழ  
மரகதமா மயிலேறி மகிழ்ந்துலவி  
கண்குளிரக் காட்சிதரும் கந்தவேளே! உன்  
கழலடியைத் தொழுவார்க் கொரு குறையுமிலையே.

நாயன்மார்கட்டு இ. குகதாசன்.

[இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 8-ம் திருவிழா]

---

## ஒலிம்பிக் முடிந்தது

(பார்சிலோனா)

பார்சிலோனாவில் கடந்த இரண்டு வாரங்களாக மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் முடிவடைந்தன.

இதுவரை கிடைக்கப்பெற்ற தங்கப்பதக்கப்பட்டியலில் ஒன்றிணைந்த சோவியத் அணி முன்னணியில் நிற்கிறது. இரண்டாவது இடத்தை அமெரிக்காவும், மூன்றும் இடத்தில் ஜெர்மனியும் நிற்கிறது. (இ-கே)

---

## பார்சிலோனா ஒலிம்பிக்கில் முன்னணி வகிக்கும் நாடுகள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இணைந்த சோவியத் | 45 | 38 | 28 |
| ஐக்கிய அமெரிக்கா | 37 | 34 | 38 |
| ஜெர்மனி | 33 | 21 | 27 |
| சீனா | 16 | 20 | 15 |
| ஹங்கேரி | 10 | 7 | 2 |
| ஸ்பெயின் | 10 | 1 | 10 |
| தென்கொரியா | 9 | 3 | 13 |
| பிரான்ஸ் | 7 | 5 | 13 |
| அவுஸ்திரேலியா | 6 | 8 | 9 |
| கனடா | 6 | 1 | 6 |
| ருமேனியா | 4 | 4 | 6 |
| இத்தாலி | 4 | 5 | 8 |
| பிரிட்டன் | 4 | 3 | 5 |
| கியூபா | 4 | 2 | 7 |
| யப்பான் | 3 | 7 | 7 |
| போலந்து | 3 | 4 | 6 |
| செக்கோசிலவாக்கியா | 2 | 2 | 1 |
| துருக்கி | 2 | 1 | 1 |
| நோர்வே | 2 | 2 | — |

# மனித உரிமை அமைப்புக்களின் உலகளாவிய கண்டனங்களை

## இல. அரசு கூடுதலாக பெறுகிறது!

[ஜெனீவா]

உலகளாவிய ரீதியில் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகளின் கண்டனங்களை அதிகம்பெற்ற நாடாக ஸ்ரீலங்கா அரசு திகழ்கிறது என்று சர்வதேச வெகுஜனதொடர்பு சாதன செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து தமிழர் மீது நடத்திவரும் தாக்குதல்களை முழுஉலகும் இன்று அவதானித்து வருகின்றது.

இதனால் மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகளின் அறிக்கைகள் யாவும் ஸ்ரீலங்கா அரசை கண்டித்தே வெளியிடப்படுகின்றன.

அரசைப் பொறுத்தவரையில் இக்கண்டனங்களை கேட்டு அலுத்துப் போய்விட்டதால் அதுபற்றியும் சிந்திப்பதேயில்லை எனவும் அச்செய்திகள் தெரிவித்தன. (இ-ரி)

---

## 18 இராணுவத்தினருக்கு இன்று நீதிமன்றில் விசாரணை

(கொழும்பு)

கடந்த ஆண்டு கொக்கட்டிச்சோலையில் 67 தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ஒரு ராணுவ அதிகாரி உட்பட 18 ராணுவத்தினர் இன்று ராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுள்ளனர்.

இந்த ராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படியாக இருக்கும் என்பதை பலர் உன்னிப்பாக எதிர்பார்க்கின்றனர். [கே]

---

## இரு வருடயுத்தத்தில் காணாமல்போனோர் பலியானோர் தொகை 15 ஆயிரம்

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடகால யுத்தத்தினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் காணாமற்போனவர்கள், பலியானோரின் எண்ணிக்கை 15,000 எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தொகை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இராணுவத் தரப்பில் 6,600 பேர் வரை இக்காலப் பகுதியில் பலியானதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

---

### அரசியல் தீர்வு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் "வடபகுதியில் நேற்று முன்தினம் படை உயரதிகாரிகள் பலியாகிய சம்பவம் முழு நாட்டையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது"

"அரசு ஒரு போதும் ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகளை எடுக்க விரும்பவில்லை" ஏனெனில் அம்முயற்சி 1983இல் ஏற்பட்ட சம்பவங்களுக்கு மீண்டும் வழிகோலலாம்.

வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு வருடாந்தம் செலவிடும் 2000 கோடி ரூபாவையும் வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு செலவிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (க)

---

### யாழ். குடா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்டன ஒன்றுகூடல் வைபவத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றுகூடலின் இறுதியில் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் 2வது செயலாளரிடம் மகஜார் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ரி-இ)

---

### இன்றைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் சனிக்கிழமை நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் கொப்பேகடுவ உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் கொலைப்பட்டதனால் திட்டமிட்ட தாக்குதலை இராணுவம் தாமதப்படுத்தக்கூடும் என்றும் ஆனால் கொலையுண்டோரினால வடிவமைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும் என்றும் அதே இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (கே)

---

### இராணுவமரியாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் உள்ள அவரது இல்லத்திலும், லெப். ஏ. லங்காதிலகவின் பூதவுடல் தெமட்டகொட இல்லத்திலும், மேஜர் என். எவ். டி. அல்விஸின் பூதவுடல் ராஜகிரியாவிலும், லெப். ஜெனரல் ஆரியரத்னவின் பூதவுடல் மிரிஹானையில் உள்ள இல்லத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பிரதமர் இவர்களின் இல்லங்களுக்குச் சென்று இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

பின்னர் கடற்படை அதிகாரி கொமடோர் எஸ். ஏ. எம் என் ஜயமஹாவின் பூதவுடலுக்கும் பிரதமர் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் பூதவுடல் குரூஸ்மீட் பிளேஸில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொட்பேகடுவவின் இறுதிச் சடங்குகள், இன்று மாலை 5-00 மணிக்கு கனத்தை மயானத்திலும், மேஜர் என். எச். டி. அல்விஸ், லெப் ஏ லங்காதிலக ஆகியோரின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு இராணுவ மரியாதையுடன் கனத்தையில் நடைபெறும்.

லெப். கேர்ணல் ஜி. எச். ஆரியரத்னவின் இறுதிச் சடங்கு கொஹுவல மயானத்தில் இன்று பிற்பகல் 2-30மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. லெப். டபிள்யூ. டி. சி. டபிள்யூ. விஜயபுரவின் இறுதிச் சடங்குகள், கட்டுவவில் உள்ள குடும்ப மயானத்தில் இன்று முற்பகல் 10-30 மணிக்கும், லெப். கேர்ணல் ஏ. பலப்பாணுவின் இறுதிச் சடங்குகள் இன்று குருநாகலிலும், லெப். கேர்ணல் எச். ஆர். ஸ்ரீபனின் இறுதிக் கிரியைகள் கண்டியிலும் இன்று நடைபெறும். (இ-க)

---

### விமலரத்னவின் இறுதிச் சடங்கு

(கொழும்பு)

வடபகுதியில் கண்ணிவெடித் தாக்குதலில் பலியான யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்னவின் இறுதிச் சடங்கு, நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

---

## 3 பொலிஸார் பதவிநீக்கம்

[கொழும்பு]

வெலியத்தை தடுப்பு முகாமில் 10 சிறைக்கைதிகள் தப்பியோடியதையடுத்து மூன்று பொலிஸார் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள், ஒரு றிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டோராவா. [இ-க]

---

## விண்ணப்ப படிவம் வந்தது

[திருநெல்வேலி]

1991/92 கல்வியாண்டு மாணவருக்கான பல்கலைக் கழக இரண்டாவது விண்ணப்பப் படிவம் வந்து சேர்ந்துள்ளது.

இவ்விண்ணப்ப படிவங்கள் குமண கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டது. [இ]

---

### இரு பிரிகேடியர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

பிரிகேடியர் ரேகண கல்வத்த, பிரிகேடியா அசோகா ஜயவர்த்தன ஆகிய இருவருமே வடபகுதியில் சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளாவர்.

இவர்கள் கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் இதுவரை கடமையாற்றியதாக தெரிவிக்கப்பட்டது.

---

### நட்டஈடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து அகதிகள் வருகை சுவிஸில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சுவிஸிலிருந்து அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் உதவி பெறப்படும்.

சுவிஸில் தற்போது தங்கியுள்ள அகதிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டு படிப்படியாக திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இலங்கை இனப்பிரச்னை தீர்விற்காக மங்கள முனசிங்க தலைமையில் இயங்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் நல்லதொரு முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [ரி]

---

### இராணுவ நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தளபதிகள், உயர் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் பலாலியில் தங்கியிருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பலாலி இராணுவ முகாமில் ஏற்படுத்தப்படவுள்ள சிவில் விவகார இணைப்பு குழுவிற்கு வவுனியா முன்னாள் அரசாங்க அதிபர் கே. ஸி. லோகேஸ்வரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா இது தொடர்பாக திரு லோகேஸ்வரனை அண்மையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பலாலியில் தங்கியிருந்து தினமும் காலை கூடி இராணுவ நடவடிக்கைகள் குறித்துஆராயும் இராணுவ அதிகாரிகளோடு இணைந்து திரு. லோகேஸ்வரன் பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

---

### கொப்பேகடுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இவர்கள் இருவரின் இடத்தையும் நிரப்புவது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். அவர்களின் இடத்திற்கு வேறு இருவரை எப்படித் தேடி எடுப்பதென்றே தெரியவில்லை.

இவர்கள் இருவரின் இடத்திற்கு எவர் நியமிக்கப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கு யுத்தம் பற்றிய பூரண விளக்கங்களையும், தந்திரோபாயங்களையும் அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்கு நீண்ட காலம் பிடிக்கும்,

---

### தமிழ்ப் பயணிகள்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

மிக மோசமாகத் தாக்கப்பட்ட தமிழ்ப் பயணிகளின் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதே போன்று கடந்த புதன், வியாழன் தினங்களிலும் தமிழ்ப் பயணிகள் வவுனியா சோதனைச் சாவடியில் வைத்துத் தாக்கப்பட்டனர்.

மேலும் வவுனியா நகர்ப் பகுதியிலும் தமிழ்மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவ தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் அறியவருகின்றது.

புதிதாக நகருக்குள் பிரவேசிக்கும் தமிழ்ப் பயணிகள் நடமாடுவதற்கு அனுமதிப் பத்திரங்கள் வைத்திருக்கவில்லை எனக் காரணம் கூறப்பட்டு, ஸ்ரீலங்காப் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டனர். [இ-சு]

---

### இராணுவ

[1-ம பக்கத் தொடர்ச்சி]

வடபகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 10 படை அதிகாரிகள் கொலையுண்டதற்கு தாமே பொறுப்பு என புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் தெரிவித்ததோடு இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளுடன் அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என்றும், தொடரும் ராணுவ நடவடிக்கையினால் தமிழ், சிங்கள மக்களின் துன்பங்கள் அதிகரிக்குமென்றும் கூறினர். (கே)

---

### நாம் எதற்காக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் மீது ஒருவர் பகை காண்கிறோம் எனக்கு புரியவில்லை".

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 10 ராணுவ அதிகாரிகளின் மரணம் பற்றி கேள்வியுற்ற பிரதமர் டி. பி. விஜேதுங்காவின் வாயால் வெளிவந்த முதல் வார்த்தைகளே இவை.

பிரதமர் விஜேதுங்க மருத்துவமனை ஒன்றை திறந்து வைக்கும் போது அவருக்கு இந்த அதிர்ச்சி செய்தி எட்டியதும் தழுதழுத்த குரலில் துயரத்துடன மேற்கண்டவாறு கூறியதாக தெரிவிக்கப்பட்டது. [கே]

---

## கொழும்பில் வெள்ளைக் கொடிகள்

(கொழும்பு)

கொழும்பில், ராணுவகடற்படை அதிகாரிகளின் மரணம் குறித்து, அரச திணைக்கள கட்டிடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

ஒரு நாளை துக்கதினமாக பிரகடனம் செய்யுமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (கே)

---

### இராணுவ அதிகாரிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சகர் ஜயதிலகா தெரிவித்துள்ளார்

இந்த இழப்பினால் இராணுவத்தில் மட்டுமல்ல மக்களின் மனதிடத்தினையும் பாதித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

அத்துடன் ஜெனரல் கொப்பேகடுவவினதும், பிரிகேடியர் விஜயவிமலரத்னவினதும் பெரிய படங்களை பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன. [கே]

---

## மரண அறிவித்தல்

### திரு. சோமசுந்தரம் ஐயாத்துரை

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற வனபரிபாலன திணைக்கள உத்தியோகத்தரும், நல்லூர் மார்க்கட் ''சுகந்தி மில்'' உரிமையாளருமான திரு. சோமசுந்தரம் ஐயாத்துரை அவர்கள் 1992 – 08 – 09 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (படவரைஞர், உரிமையாளர் துவாரகா மில்ஸ் நல்லூர் மார்க்கட், யாழ்ப்பாணம்), சுமதி, பிரபாகரன் (கனடா), சுகிர்தா (அவுஸ்திரேலியா), சுகந்தி (லண்டன்), சுமனு, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகதாஸ் (நில அளவையாளர், உரிமையாளர் சாயி கிறைண்டிங் மில், இருபாலை), இந்திராணி, நித்தியானந்தன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), ஸ்ரீகாந்தன் (றேடியோ ஒபிசர், லண்டன்), வதனி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபல வர்த்தகர் சோமசுந்தரம், காலஞ்சென்ற தங்கம்மாவின் புத்திரனும், மீனாட்சி, பொன்னுத்துரை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பண்டிதர் இராசையா, காலஞ்சென்ற வைத்தியர் இராசையா, இராசம்மா, மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஜிதா, மகிந்தா, டிலானி, சஞ்சீவ், துவாரகா, மயூரன், வாணி, கார்த்திக், உஷாணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10 – 08 – 1992, திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
எஸ். சண்முகதாஸ்,
(மருமகன்)

(சி-6654)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 6மேஇலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News papes at the General Post office Sri Lanka under Licence Number B/10336/3